# சென்னை சிவஞானம் பார்க்கில் ஹிந்தி எதிர்ப்புக் கூட்டம்

---

## தலைவர்களின் கர்ஜனை

---

## "தினமணி"க்கு நெருப்பு வைக்கப்பட்டது

---

(நமது நிருபர்)

சென்னை, ஜூன். 7.

இன்று (6-6-38) மாலை 6 மணிக்குச் சென்னைசிவஞானம் பார்க்கில் கூடிய பொதுக் கூட்டத்தில் பெருந்திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஸ்திரீகளும் பெரும்பான்மையோர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. தோழர் இராமாநுஜ நாயகி அம்மையார் தலைமை வகித்தார். தோழர்கள் ஈ. வே ரா., கே. எம். பாலசுப்பிரமணியம், அண்ணா துரை, சுவாமி அருணகிரிநாதர் முதலியவர்கள் பேசினார்கள் பிறகு தலைவர்கள் ஈ. வே. ரா., கே. எ. பி. விசுவநாதம் அவர்களும் சென்னைக் கடற்கரையில் கண்டித்துப் பேசிய விஷயங்களை "தினமணி" பத்திரிகை ஆதரித்துப் பேசியதாகப் பொய்ச் செய்தியை வெளியிட்டதற்காக தமது அதிருப்தியைக் காட்டும் பொருட்டுத் தோழர் அருணகிரி சுவாமிகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. அப்போது அங்கிருந்த கூட்டத்தினர் "தினமணியின்" இழிதன்மையான பொய்ச் செய்திகளையும் அதன் ஆசிரியர்களின் யோக்கியதைகளைப்பற்றியும் பேசி நகையாடினர். பொய்ச் செய்திகளை வெளியிடும் தினமணியையும் அதைப்போன்ற பத்திரிகைகளையும் வாங்கக் கூடாதென்றும் உறுதி செய்து கொண்டார்கள்.

---